## தலைப்பு 222 - இலங்கை இராணுவம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை இராணுவத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை இராணுவத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 06 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை இராணுவத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை இராணுவத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை இராணுவத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை இராணுவத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை இராணுவத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1 (இ) | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான 160 காணித் துண்டுகளை மதிப்பீடு செய்து கணக்குகளிற்கு பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான காணிகளை இனங்கண்டு கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதன செலவினம்

நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய மூலதன செலவினத்தின் கணக்கீட்டுச் செயன்முறையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏசீஏ 6 மாதிரியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது இலங்கை இராணுவத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் ரூபா 1.51 பில்லியனாக காணப்பட்டது. எனினும் ஏசீஏ 2(i) மாதிரியில் மூலதனச் செலவினமாக ரூபா 2.03 பில்லியன் மொத்தத் தொகை காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 0.52 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் குறித்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்குகளுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அசைவு அறிக்கை அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் திறைசேரி அச்சீட்டுத் தாள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய தொகைகளிற்கு இடையேயான வேறுபாட்டிற்கான காரணங்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கணக்கீட்டுச் செயன்முறையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் கூற்றில் (ஏசீஏ - 6) பின்வரும் சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக அந்த சொத்துக்களின் பெறுமதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை இராணுவத்தின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) | இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்ற 619 காணித் துண்டுகளிற்கு சொந்தமான 22,640 ஏக்கர்களின் பெறுமதி | 11,293 ஏக்கர் பரப்பளவான 258 காணித்துண்டுகள் இலங்கை இராணுவத்திற்கு சொந்தமானதென பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் அரச கணக்குகள் திணைக்களத்தால் உரிய காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு கோரப்பட்டுள்ளது. அந்த மதிப்பீடுகளின் பெறுமதிகள் கிடைத்த பின்னர் காணிகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் 11,347 ஏக்கர் பரப்பளவான 361 காணித்துண்டுகளை சுவீகரித்த பின்னர் அக் காணிகளை கணக்குகளிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதுடன் நீண்டகாலமாக இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த காணிகள் குறித்து நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 77.03 பில்லியன் கட்டிடங்களின் பெறுமதி | இலங்கை இராணுவத்துக்கு சொந்தமான 8,123 கட்டிடங்களின் ரூபா 112,651,224,399 தொகையான பெறுமதி ஏற்கனவே இலங்கை இராணுவத்தால் பேணப்பட்டு வரும் கணனிமயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வலையமைப்பு முறைமையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் குறித்த பெறுமதியை நிதிக்கூற்றுக்களிற்கு பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (iii) | ரூபா 13.71 பில்லியன் பெறுமதியான வாகனங்கள் | தற்போது இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் விபரங்கள் நிதிக்கூற்றுக்களிலும் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரகின்றன. | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதி கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்களின் கூற்றில் போக்குவரத்து உபகரணமாக காட்டப்பட்டிருந்த ரூபா 111.22 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் | 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 111.22 மில்லியன் தொகையான துவிச்சக்கர வண்டிகளின் பெறுமதி கணனிமயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் வலையமைப்பு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் ஆரம்ப மீதிக்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (v) | இலங்கை இராணுவத்தின் வாகனங்களிற்காக செலவினக் குறியீடு 222-01-01-2003 இன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ரூபா 153.5 மில்லியன் பெறுமதியான மூலதன அபிவிருத்திகள் | திருத்தங்கள் மூலதன தன்மையாக காணப்படுகின்றதன் காரணமாக உரிய சொத்துக்களின் பெறுமதி சொத்துக்கள் பதிவேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட மூலதன தன்மையிலான மேம்படுத்தல்கள் மூலதனமாக்கப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த எட்டு நிர்மாணங்கள் தொடர்பான ரூபா 1.09 பில்லியன் தொகையான நடைமுறை வேலையின் பெறுமதி | கட்டிடங்களின் பெறுமதியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்காத ரூபா 1,092,840,481 தொகையை மூலதனமாக்குவதற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த நடைமுறை வேலை மூலதனமாக்கப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | ரூபா 492.43 மில்லியன் பெறுமதியான நடைமுறை வேலை | நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களில் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருவதனால் ஒவ்வொரு கட்டிடக் கலைஞர்களாலும் | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நடைமுறை வேலையின் கிரயத்தை கணக்குகளிற்கு எடுக்கும் போது |

| | | | |
|---|---|---|---|
| | | நிர்மாணங்களை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமமே இந்த நிலைமைக்குக் காரணமாகும். | கட்டிடக் கலைஞரால் சான்றளிக்கப்பட்ட நடைமுறை வேலையின் கிரயம் கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| | (viii) ராகம அடிப்படை போர் உபகரண களஞ்சியத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4.35 மில்லியன் தொகையான மூலதனப் பொருட்கள் | எதிர்கால நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது களஞ்சியங்களில் காணப்படுகின்ற இருப்புக்களின் பெறுமதியை கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | களஞ்சியங்களில் காணப்படுகின்ற மூலதன சொத்துக்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை இராணுவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6.19 மில்லியன் கிரயமான நாய்கள் மற்றும் தொடர்புடைய உயிரியல் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 2.65 மில்லியன் தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க கணக்குகளில் ரூபா 3.54 மில்லியன் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட விலைச்சிட்டைகள் நடைமுறையாண்டில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் அந்த விலைச்சிட்டைகள் முன்னைய ஆண்டில் சொத்துக்களை கொள்வனவு செய்தமை தொடர்பானவையாகும். | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மூலதன சொத்துக்களின் பெறுமதியின் முழுத் தொகையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 1,044.25 மில்லியன் தொகையான பழத்தோட்டங்களின் மீதி மற்றும் வெயாங்கொட புடவை களஞ்சியங்களிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 159.63 மில்லியன் பெறுமதியான பல்வேறு நுகர்வோர் பொருட்களின் இருப்பு என்பவற்றின் பெறுமதிகள் பௌதீக ரீதியாகவோ அல்லது பதிவுகளிலோ காணப்படாத போதிலும் அவை மூலதனமாக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, தேறிய சொத்துக்கள் அச் சொத்துக்களின் பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | பழத்தோட்டங்களின் பெறுமதி இரண்டு தடவை கணக்கிடப்பட்டுள்ளதுடன் நுகர்வோர் பொருட்களின் இருப்பு செலவினக் குறியீடுகளின் மாற்றம் காரணமாக தவறுதலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மாத்திரம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சொத்துக்களை அகற்றுவதற்கான கணக்கீட்டு செயன்முறையின் போது கணக்குகளில் இருந்து | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றும் சொத்துக்களின் | சொத்துக்களின் கொள்வனவுக் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| சொத்துகளின் கிரயத்தை பதிவழிப்பதற்குப் பதிலாக அந்த சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் உழைக்கப்பட்ட ரூபா 35.83 மில்லியன் தொகை அந்த சொத்துக்களின் மீதிகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன. | கொள்வனவுக் கிரயத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிக்கப்பட வேண்டும். ஆனால் சொத்துக்களை அகற்றுவதிலிருந்தான வருமானத்தை அல்ல. |
| (உ) நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றுடன் (ஏசீஏ-6) திறைசேரி அச்சீட்டுத்தாள்களை ஒப்பீடு செய்யும் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 14 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதிகளின் மொத்தத் தொகைக்கும் அவற்றின் திறைசேரி அச்சீட்டுத்தாள்களின் ஆரம்ப மீதிகளின் மொத்த தொகைக்கும் இடையே ரூபா 36.14 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் 10 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பான திறைசேரி அச்சீட்டுத் தாள்களின் ஆரம்ப மீதிகளின் மொத்த தொகைக்கும் நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதிகளின் மொத்த தொகைக்கும் இடையில் ரூபா 42.74 பில்லியன் வேறுபாடு காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக 26 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக திறைசேரி அச்சீட்டுத்தாள்களில் ரூபா 3.35 பில்லியன் ஆரம்ப மீதி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த சொத்துக்களிற்குரிய அவ்வாறான மீதி நிதியல்லாச் சொத்துக்களின் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. 22 நிலையான | இலங்கை இராணுவம் CIGAS இற்கு காசு அடிப்படையிலான கொள்வனவுகளை பதிவுசெய்வதன் காரணமாக வருடாந்த நிதிக்கூற்றுக்களின் ஆரம்ப மீதிகளிற்கும் CIGAS இல் உள்ளடக்கப்பட்ட சொத்துக்களின் ஆரம்ப மீதிகளுக்கும் இடையில் வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் தொடர்பாக நிதியல்லாச் சொத்துகள் கூற்றில் ரூபா 25.63 பில்லியன் ஆரம்ப மீதி காட்டப்பட்டுள்ள போதிலும் அத்தகைய மீதி திறைசேரி அச்சீட்டுத் தாள்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 10 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக திறைசேரி அச்சீட்டுத்தாள்களில் உள்ள கொள்வனவின் மொத்த தொகைக்கும் அந்த சொத்துக்கள் தொடர்பான நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ள கொள்வனவின் மொத்த தொகைக்கும் இடையே ரூபா 678.23 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், 33 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக திறைசேரி அச்சீட்டுத்தாள்களின் பிரகாரம் ரூபா 1.04 மில்லியன் மொத்த பெறுமதியில் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்களை கொள்வனவு செய்தமை நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 21 வகையான சொத்துக்கள் தொடர்பாக ரூபா 636.33 மில்லியன் மொத்த கொள்வனவு தொகை மாற்றப்பட்டிருந்தமை நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் தொடர்பான திறைசேரி அச்சீட்டுத்தாள்களின் பிரகாரம் அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அசைவு அறிக்கையின் மீதிகளுக்கும், காசு அடிப்படையில் நிதி பணிப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்கும் இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கிணங்க சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 04 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக திறைசேரி அச்சீட்டுத்தாள்களில் குறிப்பிடப்பட்டுள்ள அகற்றல் சொத்துக்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்துகள் கூற்றில் ரூபா 320.81 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் 12 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக திறைசேரி அச்சீட்டுத்தாள்களில் ரூபா 16.74 பில்லியன் தொகையான அகற்றப்பட்ட மொத்த தொகை குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அத்தகைய அகற்றல்கள் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், திறைசேரி அச்சீட்டுத்தாள்களின் பிரகாரம் 05 வகையான நிலையான சொத்துக்களில் அகற்றல்கள் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் ரூபா 4.38 மில்லியன் தொகையான அகற்றல்கள் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 17.44 மில்லியன் தொகையான விவசாய வாகனங்களின் அப்புறப்படுத்தப்பட்ட பெறுமதி நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அச்சீட்டுத்தாள்களின் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் அகற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கிணங்க சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் அல்லது நி.பி. 502(2) இன் பிற்சேர்க்கை II இன் பிரகாரம் நிலையான சொத்து

பதிவேடுகள் பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 80.46 பில்லியன் பெறுமதியான 2,313,614 சதுர அடி பரப்பளவான 1,049 கட்டிடங்கள், 6.58 பில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தகவல் தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் நிலையான சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நீண்டகாலமாக இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு வந்த 11,293 ஏக்கர் பரப்பளவான 258 காணித்துண்டுகள் காணிகளிற்கான பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும் மேற்படி அறிவுறுத்தல்களின் பிரகாரம் முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்றில் விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.6.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்கான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் (ஏசீஏ-6) பிரகாரம் பாதுகாப்பு உபகரணங்கள், தளபாடங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள், தீயணைப்புக் கருவிகள், சமையலறை உபகரணங்கள், பொதுவான பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள், படகுகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பாக கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பெறுமதி, ரூபா 16.05 பில்லியன் ஆகும். எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பெறுமதி 23.05 பில்லியன் ஆகும். ஆகையால் ரூபா 7 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்களை உள்ளடக்குவதற்கும் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய சொத்து வகைகளின் கீழ் கணக்குகளிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்புடைய வேறுபாடுகளை பகுப்பாய்வு செய்த பின்னர் உரிய விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ் விபரங்களின் பிரகாரம் கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) செலவினக் குறியீடு 222-01-01- | வருமானமீட்டும் வணிக | சாத்தியமானவாறு |

| | | | |
|---|---|---|---|
| | 2509-001 இன் கீழ் வருமானமீட்டும் வணிக செயற்திட்டங்களிற்காக (ஏனையவை) மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.37 மில்லியன் தொகையான நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களிற்காக 2020 ஆம் ஆண்டிற்காக செலவினக் குறியீட்டின் (222-01-1-1-2509) கீழ் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 1,370,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 12 மீண்டெழும் செலவினக் குறியீடுகளிற்கான ரூபா 6.29 பில்லியன் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 800.4 மில்லியன் கூட்டுமொத்த தொகையும் 12 மூலதனச் செலவினக் குறியீடுகளுக்கான ரூபா 2.11 பில்லியன் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 509.13 மில்லியன் கூட்டுமொத்த தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இத்தகைய சேமிப்புகள் தேறிய நிதியேற்பாட்டில் 7 சதவீதம் தொடக்கம் 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | வருடத்தின் கடைசி நான்கு மாதங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் செலவினக் குறியீடுகளில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன; இறக்குமதி மற்றும் பெறுகை மீதான மட்டுப்பாடுகள் காரணமாக பெறுகைகள் மட்டுப்படுத்தப்பட்டன. | -மேற்படி- |
| (இ) | 6 மீண்டெழும் செலவினக் குறியீடுகள் மற்றும் 3 மூலதனச் செலவினக் குறியீடுகளுக்குப் போதியளவு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாததன் காரணமாக நி.பி. 66 இன் கீழ் ஏனைய செலவினக் குறியீடுகளில் இருந்து முறையே ரூபா 680.23 மில்லியன் மற்றும் ரூபா 210 மில்லியன் தொகைகள் மாற்றப்பட்டிருந்ததுடன் ஒரு மீண்டெழும் செலவினக் குறியீட்டிற்காக ரூபா 01 பில்லியன் தொகையும் இரண்டு மூலதனச் செலவினக் குறியீடுகளிற்காக ரூபா 30.5 மில்லியன் தொகையும் ஆக குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஆண்டின் இறுதியில் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நி.பி. 66 வகைமாற்ற நடைமுறையின் கீழ் நிதியேற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | -மேற்படி- |
| (ஈ) | போதியளவு நிதியேற்பாடுகள் இல்லாததன் காரணமாக 9 மீண்டெழும் செலவினக் குறியீடுகள் மற்றும் ஒரு மூலதனச் செலவினக் குறியீட்டின் தேறிய | கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு போதியளவு நிதியேற்பாடுகள் திறைசேரியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டை விஞ்சி ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 7.01 பில்லியன் கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. | | |
| (உ) | செலவினக் குறியீடு 222-01-01-2104-009 இன் கீழ் Brude House இராணுவ முகாமில் இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடுகளின் மூலம் ரூபா 10.5 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த குறைநிரப்பு மதிப்பீட்டில் 67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7.05 மில்லியன் தொகை ஆண்டிறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் காரணமாக வழங்குநர்களால் கட்டளைகள் பூர்த்தி செய்யப்படாததாலும், திரவப் பணம் பெற்றுக் கொள்ளப்படாததாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | செலவினங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய அத்தியாவசிய விடயங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் நிதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | நி.பி. 66 இன் கீழ் இரண்டு ஏனைய செலவினக் குறியீடுகளிலிருந்து சேவை (ஏனைய) செலவினக் குறியீடு 222-01-02-1409 இற்கு ரூபா 50 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் மாற்றப்பட்ட முழுத் தொகையும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. | விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு போதியளவு திரவப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததன் விளைவாக உரிய நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்ட நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 15 செலவினக் குறியீடுகள் தொடர்பாக ரூபா 468.28 மில்லியன் தொகையான கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பணம் செலுத்தப்படாத விலைப்பட்டியல்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுப் பிரிவால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் இதனால் மீதிகளிற்கிடையே இடைவெளியொன்று ஏற்பட்டுள்ளது. | கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி. 94 (2) மற்றும் (3) இன் கீழ் எடுக்கப்படாத இரண்டு செலவினக் குறியீடுகளின் | -மேற்படி- | இலங்கை இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுமொத்தமாக ரூபா 6.02 மில்லியன் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | கடப்பாடுகள் மற்றும் நிதிப்பிரமாணங்களின் கீழான கடப்பாடுகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 94(1) மற்றும் 214 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் இரண்டு மாதங்களுக்கும் மேலாக 395 பொறுப்புக்கள் காணப்பட்டதுடன் அப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 50.83 மில்லியனாக காணப்பட்டது. | 2020.10.31 வரை பெறப்பட்ட விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு மாத்திரமே திறைசேரியால் நிதிகள் விடுவிக்கப்பட்டன. | பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு சாத்தியமானளவு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட பொறுபபுக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டிய ரூபா 30.34 மில்லியன் பொறுப்பு குறித்த நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020.12.31 இல் உள்ளவாறு இலங்கை இராணுவத்திற்கு சில விலைப்பட்டியல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததன் காரணமாக வேறுபாடொன்று ஏற்பட முடியும். | மீதிகளின் வேறுபாட்டிற்காக குறித்துரைக்கப்பட்ட காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு உடனடி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.3 ஏனைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய திணைக்களங்களுக்கான ஏழு செலவினக் குறியீடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 597.08 மில்லியன் நிதியேற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 356.87 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ரூபா 240.21 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இச் சேமிப்புக்கள் 4 சதவீதம் தொடக்கம் 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | கொவிட் தொற்றுநோய் காரணமாக இச் சேமிப்புக்கள் காணப்பட்டன. | ஏனைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு ஆண்டு தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக சேவை வறிதாக்கப்பட்டிருந்த 3995 இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் 462 சிவில் உத்தியோகத்தர்களிடம் இருந்து இடர்கடன் மீதிகள், விழா மற்றும் விசேட முற்பணங்களாக அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 46.06 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த கடன் மீதிகளில் ரூபா 5 மில்லியன் தொகை 10 தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக முன்கொண்டு வரப்படிருந்தன. | அக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | அக் கடன் மீதிகள் உடனடியாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 25 ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் 71 சிவில் உத்தியோகத்தர்களிடம் இருந்து 1 ஆண்டு தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 5.35 மில்லியனாக காணப்பட்டது. தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் இக் கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மரணமடைந்த 31 இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் 05 சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1.42 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அத்தியாயத்தின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2 ஆண்டுகள் தொடக்கம் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த வேலை இடைநிறுத்தப்பட்ட 7 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 173,436 ஆக காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(3)(4) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற 128 வாகன விபத்துகளுக்கான பூர்வாங்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 197 வாகன விபத்துக்களுக்கான முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 715 (1)(உ), 715(2) மற்றும் 751(1) | 2021 சனவரி 01 தொடக்கம் 2021 பெப்ரவரி 05 வரை கொஸ்கம மின்சார மற்றும் இயந்திர பொறியியல் வேலைப் பட்டறை களஞ்சியங்களில் இருந்து பெறப்பட்டு வழங்கப்பட்ட | தற்போது இது bin அட்டைகளில் பதிவு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டுள்ளது. | உரிய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1,900 இற்கும் மேற்பட்ட வகையான பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குதல் ஆகியவை ஒவ்வொரு வகை பொருட்களுக்காகவும் பராமரிக்கப்படும் களஞ்சியங்களின் bin அட்டைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்பட்ட 7,127 வாகனங்கள் தொடர்பில் மீளாய்வாண்டு அல்லது மன்னைய ஆண்டுகளில் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் போக்குவரத்து பிரிவால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் நுகர்வின் பிரகாரம் ஓட்ட அட்டவணைகள்/ போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தில் எரிபொருள் சமப்படுத்தப்பட்டிருந்தது. | இலங்கை இராணுவத்தின் கடமைகளிற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களில் வருடாந்தம் எரிபொருள் நுகர்வு வினைத்திறனாக பரீட்சிக்கப்படுவதில்லை. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.6 கட்டுநிதிகளை பெற்றுக்கொள்ளுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத் திறைசேரியிலிருந்து ரூபா 197,978.3 மில்லியன் கூட்டுமொத்தமான கட்டுநிதி இலங்கை இராணுவத்தால் கோரப்பட்டிருந்த போதிலும் காசாக பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தக் கட்டுநிதி ரூபா 189,399.9 மில்லியன் மாத்திரமேயாகும். ஆகையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையில் 4.3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 8,578.4 மில்லியன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுள்ளவாறு நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களின் பெறுமதி தொடர்ந்துவரும் மாதத்தில் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது. | கட்டுநிதித் தேவைப்பாடு மற்றும் நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களின் பெறுமதி என்பன திறைசேரிக்கு முன்னரே அறிவிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை இராணுவத்திற்காக மீளாய்வாண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கை திட்டங்களை தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மூன்று ஆண்டுகளாக எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் எண்ணிக்கை ரூபா 29.74 பில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது இலங்கை இராணுவத்தின் பிரதான விநியோகப் பிரிவுகளுக்கான மீன்களை கொள்வனவு செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது ரூபா 2.26 மில்லியன் பெறுமதியான 3,119 கிலோகிராம் மீன் வகைகள் உடன்படிக்கைகளுடன் இணங்காமல் 11 சந்தர்ப்பங்களில் பதிலீடற்ற உணவுப்பொருட்களாக வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. ரூபா | துருப்புக்களுக்கு (troops) அங்கீகரிக்கப்பட்ட உணவு மற்றும் பானங்களை வழங்குபவர்களால் மீன்கள் முறையாக வழங்கப்படாத சந்தர்ப்பங்களின் போது பரிந்துரைக்கப்பட்ட கலோரி உட்கொள்ளலைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட அறிவுரைகளின் பிரகாரம் குறைந்த விலைகளில் விலைப்பட்டியல்களை | பதிலீடுகளை வழங்கும் போது உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் துருப்புக்களின் ஊட்டச்சத்து மற்றும் விருப்பங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 896,886 பெறுமதியான 962 கிலோகிராம் மீன் வகைகளுக்காக பதிலீடுகள் வழங்குநர்களால் வழங்கப்பட்டிருக்காத முப்பத்தெட்டு சந்தர்ப்பங்கள் 2020 சனவரி மாதத்தில் மாத்திரமே அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 2.82 மில்லியன் பெறுமதியான 4,162 கிலோகிராம் மீன் பரிந்துரைக்கப்பட்ட 50 சதவீத எல்லையை விஞ்சி பதிலீடுகளாக வழங்கப்பட்டிருந்தது. | தயாரிப்பதற்கும், தண்டப்பணங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (இ) | பெறுகை நடவடிக்கைகள் சரியான கால எல்லையினுள் திட்டமிடப்பட்டிருக்காததன் காரணமாக ரூபா 6.06 மில்லியன் கிரயத்தல் 250 கவேர்ஸ் அவுட்டர்களை (covers outer) கொள்வனவு செய்யும் போது கேள்வி மீளக் கோரப்பட வேண்டியதுடன் கேள்விதாரர் ஒருவரின் விலைகளின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் பெறுகை நடவடிக்கைகள் ஏறத்தாழ 6 மாத காலப்பகுதி தாமதமாகியிருந்ததுடன் முதல் முறை போட்டிக் கேள்வியின் போது பெறக்கூடிய விலை நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | பூர்த்திசெய்யப்படாத கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக இக் கோவைகள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது. | பெறுகை முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் உரிய நேரத்தில் பொருட்கள் சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடியவாறும் அரசாங்கத்திற்கு சாதகமாகவும் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மாலி நாட்டில் (State of Mali) அமைதிகாக்கும் கடமைகளிற்காக பணியில் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 685 துருப்புக்களுக்குத் தேவையான பொருட்கள், ஆயுதம் ஏந்திய மற்றும் நிராயுதபாணியான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த போக்குவரத்து மற்றும் ஏனைய உபகரணங்களில், ரூபா 1.38 பில்லியன் பெறுமதியான போக்குவரத்து மற்றும் உபகரணங்களின் இருப்பு பல்வேறு பிராந்தியங்களில் அமைந்துள்ள பல பிரதான களஞ்சியங்களில் | புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதுடன், துருப்புக்கள் அதிகரிக்கும் போது மாலி நாட்டிற்கு மேலும் அனுப்புவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொருட்கள்/ உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் இருப்புக்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகை தேவைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் உபகரணங்களின் இருப்பு அரசாங்கத்திற்கு அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு |

| | | |
|---|---|---|
| களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அந்த களஞ்சியங்களில் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு 2021 மே தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியினுள் காலாவதியாகியிருந்த ரூபா 1.07 மில்லியன் பெறுமதியான 924 லீற்றர் வர்ணப்பூச்சு (paint) பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்று காணப்பட்டது. அமைதி காக்கும் பணிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்காத அவற்றின் மேலதிக கையிருப்புக்கள் தீவின் சில இடங்களில் அமைந்துள்ள குறித்த களஞ்சியங்களில் விளைவற்றிருந்தன. | | பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யுத்தத்தின் போது பயங்கரவாதிகளிடமிருந்து பெறப்பட்ட 539 வாகனங்களின் சட்டப்பூர்வ உரிமைத்துவம் இராணுவத்திற்கு மாற்றப்பட்டிருக்காததுடன் இராணுவத்திற்கு சொந்தமான 5,534 வாகனங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இயங்கும் நிலையில் உள்ள வாகனங்களின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கும் இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கு காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெற்றுக்கொண்ட வாகனங்களின் சட்டரீதியான உரிமைத்துவத்தை மாற்றுவதற்கும் காப்புறுதி பூட்கை எடுக்கப்பட்டிருக்காத வாகனங்களிற்கு காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பத்தியின் வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய மாதிரிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் | | |

| | | | |
|---|---|---|---|
| | சேர்த்து குறிப்பு (i) மற்றும் (ii) ஆக சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்று மற்றும் புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் கூற்று என்பன பின்வரும் குறைபாடுகளுடன் தயாரிக்கப்பட்டிருந்தன. | | |
| (i) | சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டதும் சாலாவ இராணுவ முகாமில் நிறுத்தப்பட்டிருந்த போது வெடித்துச் சிதறியதன் மூலம் அழிவடைந்ததுமான 62 வாகனங்கள் தொடர்பான ரூபா 746.34 மில்லியன் தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவழித்தல் அல்லது விட்டுவிடுதல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட இவ் வாகனங்கள் இருப்பிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது இவ் வாகனங்களின் பெறுமதி இலங்கை இராணுவத்தின் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை இராணுவத்திற்கு மாத்திரம் ஏற்பட்ட சேதங்கள் நட்டங்கள் அல்லது விட்டுவிடுதல்களாக இனங்காணப்பட வேண்டும். |
| (ii) | ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான தகவல்கள் 1987 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பதிவழிக்கப்பட்டிருக்காத போதிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட சேதங்கள் மற்றும் பதிவழித்தலிற்கான தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் மாதிரிகளை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கை இராணுவத்திற்குச் சொந்தமான 222 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் சேதங்கள், நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்று அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறித்த 222 வாகனங்களில் 155 வாகனங்களுக்கு மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 110.4 மில்லியனாக உள்ளதுடன் 67 வாகனங்களுக்கான நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட 63 வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் மற்றும் 1990 ஆம் ஆண்டு | 67 வாகன விபத்துகளின் பூர்வாங்க மதிப்பீடுகள் வெளியிடப்படவில்லை, ஏனெனில் பூர்வாங்க விசாரணைகள் நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படுகின்றதுடன் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு கணிசமான அளவு கால அவகாசம் தேவைப்படுகிறது. ஆகையால் 63 வாகன விபத்துக்கள் தொடர்பில் சேதங்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிலிருந்து நட்டங்கள் மற்றும் சேதங்களுக்காக உரிய பதிவேட்டை தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் இதுவரை மதிப்பிடப்பட்டிருக்காத வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்களை மதிப்பிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற 465 வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட சேதங்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் தவறவிடப்பட்டமை, மோட்டார் வாகனங்கள் தீயினால் அழிந்தமை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்கள் உட்பட 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இலங்கை இராணுவத்தின் களஞ்சியங்களில் ஏற்பட்ட ரூபா 15.69 மில்லியன் தொகையான 17 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான நடவடிக்கைகள் இராணுவத் தளபதியின் முடிவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான பல்வேறு சொத்துக்களுக்கு ஏற்பட்ட 17 சேதங்கள் தொடர்பிலான பரீட்சிப்புக்கள் பூர்த்தியடைந்த பின்னர் இராணுவத் தளபதியின் முடிவிற்காக சமர்ப்பிக்கப்பட்டு, அந்த முடிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு, சட்ட சேவைகள் பணிப்பாளர் சபையினால் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உரிய நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை களஞ்சிய தீ விபத்துக்கள், மாலி நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல்களால் ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள், களஞ்சியங்களில் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தவறவிடப்பட்டமை, வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட பல்வேறு நட்டங்கள் மற்றும் சேதங்கள் மற்றும் இராணுவ வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் உள்ளிட்ட பல்வேறு சொத்துக்களுக்கு ஏற்பட்ட ரூபா 85.48 மில்லியன் தொகையான 35 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நீதிமன்றங்களிற்கு பூர்வாங்க விசாரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் | பூர்வாங்க புலனாய்வுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் சாத்தியமானளவு விரைவாக நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | -------------------------------------- | ------------------------------------ | ----------------- |
| (அ) | வெரஹர பிரதேசத்தில் இராணுவ மருந்து களஞ்சியசாலை ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன், போதைப்பொருட்களை சேமித்து வைப்பதற்காக இருக்க வேண்டிய தரத்தில் இந்த கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்பு கமரா முறைமையும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. கொவிட் - 19 ஐத் தவிர்ப்பதற்குத் தேவையான ரூபா 45.6 மில்லியன் பெறுமதியான மருத்துவ பொருட்கள், பெரிய அளவிலான எதனோல் மற்றும் சுகாதாரப் பொருட்கள் (ethanol and sanitary wares) கட்டிடத்தின் படிக்கட்டுகள் மற்றும் மேல் தளத்தின் தாழ்வாரத்தில் முறைசாரா வகையில் களஞ்சியப்படுத்தட்டுள்ளன. மழை நாட்களில் களஞ்சியப் பொருட்களிற்குப் மழைநீர் ஓடும் அபாயம் உள்ளது. இந்த வளாகத்தில் 14,450 சதுர அடி பரப்பளவில் களஞ்சிய அறை ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இடப்பற்றாக்குறை காரணமாக மருத்துவப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் களஞ்சியசாலைக்கு வெளியே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை இராணுவத்தின் வசம் பொருத்தமான புதிய கட்டிடம் இல்லாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் வெரஹெரவில் உள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை வளாகத்தில் அடிப்படை மருந்து களஞ்சியசாலையை அமைப்பதற்கு பொருத்தமான கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட மருந்து களஞ்சியசாலை கட்டிடத்தின் நிர்மாணத்தை துரிதப்படுத்துவதற்கும், அதுவரை பொருட்கள் சேதமடையாமல் உரிய மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படு வதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இராணுவ முகாம்களில் மீன்களை களஞ்சியப்படுத்துவதற்கு போதுமான ஆழமான உறைவிப்பான்களை (deep freezers) வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை இராணுவத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் ஆழமான உறைவிப்பான்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | போதுமான ஆழமான உறைவிப்பான்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இராணுவத்தின் சிவில் பதவியணியில் சிரேஷ்ட மட்டத்தில் 04 வெற்றிடங்கள் மற்றும் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் 83 வெற்றிடங்கள் உட்பட 1,469 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சேவைத் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சிவில் பதவியணியினரில் 9,650 உத்தியோகத்தர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சி கற்கைநெறிகள் ஒழுங்குசெய்யப்பட முடியாதிருந்தன. | பதவியணியினரின் பயிற்சி ஊடாக செயலாற்றலை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |